**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of BNSS)**

**DVC. No. 21/2025**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜீவிதா (PW1 Cross) | Date | : 20.01.2026 |
| Husband Name | : ராஜாராமன் | | : |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. 1ம் எதிர் மனுதாரர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் விவசாய வேலையும், AC மெக்கானிக்காகவும் வேலை செய்து வருகிறார். 1ம் எதிர் மனுதாரர் எந்த ஊரில் AC மெக்கானிக்காக வேலை பார்த்து வருகிறார் என்றால் என்னை திருமணம் செய்து கொள்ளும் போது Ac மெக்கானிக் வேலை பார்ப்பதாக கூறினார். ஆனால் எங்கு வேலை பார்த்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. எனக்கும் 1ம் எதிர் மனுதாரருக்கும் திருமணம் ஆகி 1 ½ வருடங்கள் ஆகின்றது. திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் 1ம் எதிர் மனுதாரர் வீட்டில் அவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தேன் என்றால் 15 நாட்கள் வாழ்ந்தேன்.

2. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிர்மனுதாரர்கள் வரதட்சனை கேட்டு என்னை கொடுமை படுத்தியதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிர் மனுதாரர் என்னிடம் எப்போது வரதட்சனை கேட்டார் என்றால் திருமணம் முடிந்து 4வது நாளிலேயே கேட்டார். 1ம் எதிர் மனுதாரர் எனக்கு போட்ட நகைகள் போதவில்லை என்று கூறி பிரச்சனை செய்தார். திருமணத்தின் போது எனக்கு எனது பெற்றோர் 6 பவுன் நகைகள் செய்தனர். தற்போது அந்த நகை என்னிடம் உள்ளது. திருமணத்தின் போது சீர்வரிசை பொருட்கள் எவ்வளவு ரூபாய்க்கு எனது பெற்றோர் செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இருசக்கர வாகனம் வாங்குவதற்கான எனது பெற்றோர் கொடுத்த ரூ. 1 லட்சத்தை

1ம் எதிர் மனுதாரர் வாங்க மறுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த பணம் தற்போது யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது.

3. நான் தற்போது வேலை பார்த்து வருகிறேனா என்றால் இல்லை. நான் திருமணத்திற்கு முன்பு வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். 2ம் எதிர் மனுதாரருக்கு கண் பார்வை சரியாக தெரியாத நபர் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும் எதிர்மனுதார்களும் ஒன்றாக வசித்து வந்தோம். திருமணத்திற்கு பிறகு 2ம் எதிர் மனுதாரர் தனியே சமைத்து சாப்பிட்டு வந்தார். எனக்கு சமைப்பதற்கு 1ம் எதிர் மனுதாரர் எந்த பொருட்களும் வாங்கி கொடுக்கவில்லை. திருமணம் முடிந்து 15 நாட்களுக்கு பின்னர் என்னை எதிர் மனுதாரர்கள் கழுத்தை பிடித்து வெளியில் தள்ளினார்கள். அன்று முதல் இன்று வரை எனது பெற்றோர் வீட்டில் தான் வசித்து வருகிறேன்.

4. சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதார்களுக்கு எதிராக என்ன புகார் கொடுத்தேன் என்றால் 1ம் எதிர் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழவில்லை என்றும், வரதட்சனை கொடுமை செய்து வருகிறார்கள் என்றும் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த பின்னர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனனையும் 1ம் எதிர் மனுதாரரையும் சமாதானம் செய்து வைத்தார்கள். அதன் பிறகு 10 நாட்கள் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழந்தேன். 1ம் எதிர் மனுதாரர் என்ன காரணத்திற்காக விஷம் அருந்தினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் 1ம் எதிர் மனுதாரருடன் சரிவர குடும்பம் நடத்தாததால் தான் அவர் விஷம் அருந்தினார் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் விஷம் அருந்தியது முதல் எந்த வேலைக்கும் போகவில்லை என்றால் விவசாயம் செய்து வருகிறார். வேலைக்கு செல்கிறாரா என்று எனக்கு தெரியாது. 1ம் எதிர் மனுதாரருக்கு சொந்தமாக வீடு உள்ளதா என்றால் உள்ளது . அந்த வீட்டில் 1ம் எதிர்மனுதாரருக்கும் அவரது சகோதரர்களுக்கம் பாகம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. எங்களது திருமண செலவை பாதி அளவுக்குமேல் 1ம் எதிர் மனுதாரர் தான் செய்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் விஷம் அருந்திய

நாள் முதல் இன்று வரை அவரது சகோதரரின் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் தற்போதும் என்னுடன் வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. 2ம் எதிர் மனுதாரர் வயதானவர், கண்பார்வை சரியாக தெரியாதவர் என்றாலும், அவரை நான் பராமரிக்காமல் விட்டு விட்டதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.